**தலைப்பு 150 – பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 150 – பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 09 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 442.77 மில்லியன் ஆகும். அதில் மீளாய்வாண்டின் முடிவில் ரூபா 405.76 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, அமைச்சிற்கு மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய ஏற்பாட்டில் ரூபா 37.01 மில்லியன் அல்லது 8.36 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது. விபரம் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புகள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருபவை | 214.67 | 213.50 | 1.17 | 0.54 |
| மூலதனம் | 228.10 | 192.26 | 35.84 | 15.71 |
| மொத்தம் | 442.77 | 405.76 | 37.01 | 8.36 |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சானது 2016 ஆம் ஆண்டிற்கு வருமானக் குறியீடொன்றுக்கு ரூபா 26.14 மில்லியன் தொகைகயினை மதிப்பிட்டிருந்ததுடன் ரூபா 32.27 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 123.45 சதவீதமாக காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது**

| வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | தேறிய ஏற்பாட்டின் சதவீதமொன்றாக மிகை |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 20.03.02.21 | 26.14 | 32.27 | 6.13 | 23.45 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குப் பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் மற்றும் உள்ளவாறான பெறுமதியும் வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 3.50 | 3.48 | 2.00 | 2.19 | 12.00 | 8.50 |

**2.4 கட்டு நிதிக் கணக்கு**

அமைச்சின் கீழ் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0437/0016/000 இலக்கக் கட்டு நிதிக்கணக்கின் கட்டுநிதி மீதி ரூபா 13.30 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழ் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 6000/0000/00/0018/0086/000 இலக்க வைப்புக் கணக்கின் மீதி ரூபா 0.23 மில்லியனாக இருந்தது.

## 2.6 கணக்காய்வு அவதானிப்பு

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

பின்வரும் பதிவேடுகளினை அமைச்சு பேணியிருக்காத அதேவேளை, சில பதிவேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் முறையாக பராமரிக்கப்பட்டிருக்காமை, தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடு | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பிணைப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 (I) | பேணப்பட்டிருக்காமை |
| (ஆ) | நட்டங்களுக்கான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | முறையாகப் பேணப்பட்டிருக்காமை |
| (இ) | விடுமுறைப் பதிவேடு | நிதி ஒழுங்குவிதியின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவு | முறையாகப் பேணப்பட்டிருக்காமை |
| (ஈ) | வாகன ஓட்டப் புத்தகங்கள் | நிதிப்பிரமாணம் 1645 (அ) | நாளது வரையாக்கப்பட்டிருக்காமை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களினதும் மற்றும் 04 ஏனைய செலவின விடயங்களினதும் மொத்த மதிப்பீடப்பட்ட கிரயத்தில் 68 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் வரையான மொத்த ஏற்பாடுகள் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணங்கள் 66 மாற்றங்களுக்குப் பதிலாக, குறைநிரப்பு மதிப்பீடனால் 10 செலவின விடயங்களுக்கு மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வித மதிப்பீட்டு ஏற்பாடுகளுமின்றி ரூபா 70 மில்லியன் தொகையான ஒரு செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. 14 சதவீதம் தொடக்கம் 9200 சதவீத வீச்சினையுடைய ஏனைய 09 செலவின விடயங்களுக்கு குறைநிரப்பு ஒதுக்கீட்டினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு போக்குவரத்து செலவினம் ரூபா ஒரு மில்லியனாக காணப்பட்ட போதிலும், 02 குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றீடுகள் ரூபா 0.9 மில்லியன் மற்றும் ரூபா 1.66 மில்லியன் தொகையாக காணப்பட்டது. ஆகையினால் இந்த செலவின விடயம் மூல மதிப்பீட்டின் 256 சதவீதமாக காணப்படுகின்றது அல்லது மேலதிக ஏற்பாடு ரூபா 2.56 மில்லியன் தொகை பெறப்பட்டிருந்தது.

(ஈ) 20 செலவின விடயங்களுடன் தொடர்புடைய ரூபா 58,050,000 தொகை ஆண்டின் இறுதிக்கு முன்னர் முடிவடைந்திருந்தது. ஆகையினால், ஏனைய 13 செலவின விடயங்களுக்கு சொந்தமான ரூபா 15,870,589 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், தொடர்புடைய நோக்கவிடயத்திற்கு வரவு வைத்து நாளோடொன்றினால் பிழைத்திருத்தமொன்றாக குறிப்பிட்டு அது திருத்தப்பட்டிருந்தது.

(உ) எரிபொருள் மற்றும் போக்குவரத்திற்கான தேசிய பாதீட்டு ஏற்பாட்டின் 2015 திசெம்பர் 29 ஆம் திகதிய 7/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில் முறையே 15 சதவீதம் மற்றும் 10 சதவீத வருடாந்த மதிப்பீட்டு சேமிப்பு கட்டாயமாக சேமிக்கப்படல் வேண்டும். ஆனால், இரண்டு செலவின விடயங்களுக்கு கட்டாய சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 வருமானக் கணக்கு

20.03.02.21 ஆம் இலக்க நோக்கவிடய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக, வருமான மதிப்பீடுகளினை தயாரித்தல், வருமானத்தை சேகரித்தல், கணக்கீடு மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தலுக்கு அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார். தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் பலவீனங்கள் வெளிப்படுத்தப்பட்டது.

2016 இல் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் தேறிய வருமான சேகரிப்பு மற்றும் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டுக்கிடையிலான ரூபா 6,129,859 வித்தியாசத்திற்கான காரணங்கள், "2016 யூலை 21 இலிருந்து கப்பல் எண்ணெய் விற்பனைகள் யூ.எஸ்.டொலர் 100 இலிருந்து 1000 வரையான திருத்தியமைக்கப்பட்ட வருடாந்த பதிவுக் கட்டணம்" எனக் குறிப்பிடப்படும் வருமானக் கணக்கின் 18 ஆம் இலக்கத்தின் கீழ்க் கணக்கிடப்பட்டிருந்தது. திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் வருமானத்தை அதிகரிப்பதற்கான விளைவு ரூபா 785,691 ஆன தொகையாகக் காணப்பட்ட போதிலும் தேறிய வருமான சேகரிப்பு ரூபா 6,129,859 ஆகக் காணப்பட்டது. அதில் மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பில் 2016 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் மலேசியன் கம்பனியொன்றுக்கிடையில் புதிய உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ள காலத்தினை இரத்து செய்வதற்காக ஒரே நேரத்தில் ரூபா 4,340,000 தொகை பெறப்பட்டது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 15001 ஆம் விடய இலக்க அரச உத்தியோக்தர்களுக்கான முற்பணக் கணக்கு இணக்கக்கூற்றின் மீதான தெரிவுக் கணக்காய்வு பரிட்சீப்பில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டது.

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், ரூபா 91,478 தொகையான பெறுமதியுள்ள நிலுவை மீதியினை சேகரிப்பதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்ததுடன் நிலுவைகளின் வீச்செல்லை 3 தொடக்கம் 4 வருடங்களாகும்.

### 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 3.5.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

2014 பெப்வரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கு செயல்நடவடிக்கைத் திட்டமொன்றினை அமைச்சு தயாரிக்க வேண்டிய போதிலும், 2016 இல் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நான்கு நிறுவகங்களுக்கு மாத்திரம் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

#### 3.5.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

பெறுகைகள் திட்டமொன்றினை அமைச்சு தயாரித்திருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 80.87 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட 04 அத்தியாவசிய விடயங்கள் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.5.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம் நிதியாண்டு மூடப்பட்டதிலிருந்த 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை பாராளுமன்றத்திற்கு அமைச்சு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2017 யூலை 04 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரீட்சிப்பில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்.**

2016 மார்ச் 31 இன் 05/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1.4 பந்தியின் பிரகாரம் 27 வகைகளின் 94 விடயங்கள் பற்றாக்குறையொன்று, வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் தொடர்ந்தும் காணப்பட்டதுடன் மேலே குறிப்பிடப்பட்டது தொடர்பில் தேவையான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

அமைச்சினால் வெளித்தரப்பினருக்கு சில சொத்துக்கள் முறையற்று விடுவிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்கள் வகை | சொத்துக்கள் வழங்கப்பட்ட நிறுவகம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| மோட்டார் வாகனமொன்று | தனியார் கம்பனியொன்றுக்கு | 1,500,000 | 2016 மே 16 தொடக்கம் 2017 ஆகஸ்ட் 09 வரை |
| மோட்டார் வாகனமொன்று | மேற்குறித்த தனியார் கம்பனிக்கு | 2,500,000 | 2016 ஆகஸ்ட் 26 தொடக்கம் 2017 ஆகஸ்ட் 09 வரை |

**(இ) ஏனைய நிறுவகங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் முறையற்ற பயன்பாடு**

முறையான அங்கீகாரங்கள் இன்றி அமைச்சினால் ஏனைய நிறுவகங்களுக்கு சொந்தமான சில சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்கள் வகை | சொத்துக்களை வழங்கிய நிறுவகம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| மோட்டார் வாகனமொன்று | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 17,900,000 | 2015 ஒக்தோபர் 09 இலிருந்து 2017 ஆகஸ்ட் 09 வரை |

## 3.7 இனங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடனான இணங்காமைகள் சந்தர்ப்பங்கள் பகுப்பாயப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச நிதிப்பிரமாணங்கள் குறியீடு | |
| (i) நிதிப்பிரமாணம் 103 (I) (ஆ) | 2016 ஆம் ஆண்டில் நேரிட்ட 03 மோட்டார் வாகன விபத்துக்கள் பொலிஸ்க்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | |
| (i) 1992 ஆகஸ்ட் 19 இன் 26/92 ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சுக்கு சொந்தமான 11 வாகனங்களில் அரச சின்னத்தின் வர்ணம் பூசப்பட்டிருக்கவில்லை |
| (ii) 2002 பெப்வரி 25 இன் 01/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை | 11 வாகனங்களுக்கு அமைச்சின் பெயர் வர்ணம் பூசப்பட்டிருக்கவில்லை |

## 3.8 உள்ளூர் நிதியளிப்பிலிருந்தான செயற்திட்டங்களின் அமுல்படுத்தல்

### (அ) செயற்திட்டத்தின் பூர்த்தியில் தாமதங்கள்

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயற்திட்டங்கள் தாமதமடைந்தமை கணக்காய்வு தெரிவு பரிட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்டது.

#### (i) எண்ணெய் சுத்திகரிப்பின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல்

பொருளாதார முகாமைத்துவத்திற்கான அமைச்சரவையின் உப குழுவின் பல்வேறு சந்தர்ப்பங்களில், 1969 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்பின் விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் விபரமாக கலந்துரையாடப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் நிதிசார் சாத்திய கற்கைகளுக்கு மாத்திரம் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

#### (ii) திருகோணமலை எண்ணெய் தாங்கி தொகுதியின் புனர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி

புவியியல் அமைவிடத்தின் பிரகாரம், திருகோணமலை உலகின் இரண்டாவது ஆழமிக்க துறைமுகமாக காணப்பட்டுகின்றது. திருகோணமலை எண்ணெய் தொகுதி 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டதுடன் 12,500 கன மீட்டர்கள் கொள்ளளவுடைய 102 எண்ணெய் தாங்கிகளையும் ஏனைய வசதிகளையும் கொண்டுள்ளது.

தற்போது காணப்படுகின்ற 99 எண்ணெய் தாங்கிகளில், 14 எண்ணெய் தாங்கிகள் சிலோன் இந்தியன் எண்ணெய் கம்பனியால் பயன்படுத்தப்படுகின்றது. நிறைந்துள்ள எண்ணெய் தாங்கிகளின் 84 மேல் பிரிவின் புனரமைப்புக்கான ஆரம்ப தீர்மானம் 2011 இலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஆண்டின் இறுதியில் புனர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்காமையின் காரணத்தால் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

#### (iii) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் எண்ணெய் குழாய் முறைமையின் புனர்நிர்மானம் மற்றும் விரிவாக்கதல்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் எண்ணெய் குழாய் முறைமையின் புனர்நிர்மானம் மற்றும் விரிவாக்கக் கூறுகளாக, காணப்படுகின்ற எண்ணெய் குழாய் முறைமையின் புனரமைப்பு மற்றும் மேலதிக களஞ்சிய வசதிகளின் கிடைப்பனவுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் எண்ணெய் குழாயின் புனர்நிர்மானம் மற்றும் விரிவாக்கலுக்கு செயற்திட்டத்தின் பொறியியலாளரின் மதிப்பீடு ஐக்கிய அமெரிக்க டொலர் 61 மில்லியனாகக் காணப்படுகின்றதுடன், 2015 திசெம்பர் 09 இல் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பொறியியல் பெறுகை செயற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச மனு அழைப்பிற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்நது. இது தொடர்பாக போதுமான நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(iv) பெற்றோலிய பொருட்களுக்கான விலைமதிப்பிடல் சூத்திரமொன்றின் அறிமுகம்**

பெற்றோலிய பொருட்களுக்கு நிதிசார் மற்றும் பொருளாதார ரீதியில் நியாயமானதொரு விலை சூத்திரத்தினை தயாரிப்பதற்கு 2015 பெப்ரவரி 10 இல் பொருளாதார அபிவிருத்திக்கான அமைச்சின் உப-குழு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்பான பணி பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 16 | 12 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாந்தர மட்டம் | 51 | 32 | 19 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 27 | 23 | 04 |
| | **மொத்தம்** | **97** | **69** | **28** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் உத்தம ஊழியர் மட்டத்தினை பேணுவதில் குறைபாட்டினைக் கொண்டிருந்தமை மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையினை சரியான நேரத்தில் மதிப்பிடாமையினால் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சில் 28 வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்பட்டன. அவையாவன சிரேஷ்ட மட்டத்தில் 04, மூன்றாம் மட்டத்தில் 01, இரண்டாம் மட்டத்தில் 19 மற்றும் ஆரம்ப மட்டத்தில் 04 ஆகும்.